# 23-04-2024 செய்தி

## நாட்டிலேயே முதன்முறையாக ஆசிரியர்களுக்கு ஏ.ஐ., பயிற்சி

- நாட்டிலேயே முதன் முறையாக, கேரளாவில், 80,000 பள்ளி ஆசிரியர்களுக்கு, ஏ.ஐ., எனப்படும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் குறித்து பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

**மூன்று நாட்கள்**

- எட்டாம் வகுப்பு முதல், பிளஸ் 2 வகுப்பு வரை, 80,000 ஆசிரியர்களை மேம்படுத்தும் நோக்கில், 'கைட்' எனப்படும், கேரள உட்கட்டமைப்பு மற்றும் கல்விக்கான தொழில்நுட்ப அமைப்பால், மே 2 முதல் மூன்று நாட்களுக்கு, ஏ.ஐ., தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.
- இந்த ஏ.ஐ., தொழில் நுட்பப் பயிற்சியில், பி.டி.எப்.,கள், படங்கள், வீடியோக்களில் சிக்கலான ஆவணங்களை எளிமையாக்குவதற்கும், முக்கியமான தகவல்களைத் தக்கவைத்து, ஏ.ஐ., தொழில்நுட்பத்தை பயன்படுத்தி புதிய உள்ளடக்கத்தை உருவாக்குவதற்கும், ஆசிரியர்களுக்கு கற்றுத் தரப்படும்.
- பாடம் சார்ந்த காட்சிகளை உருவாக்குவது; திருத்துவது; அவற்றை கார்ட்டூன்கள் அல்லது, ஓவியங்களாக மாற்றுவது; படங்களுடன் உரையை ஒருங்கிணைப்பது உள்ளிட்ட தொழில்நுட்பங்களை ஆசிரியர்கள் கற்றுக் கொள்வர்.

**கற்றல் திறன்**

- வரைபடங்கள் மற்றும் விளக்கப்படங்களை உருவாக்குதல், விளக்கக் காட்சிகள் மற்றும் அணி மேஷன்களை உருவாக்க, ஏ.ஐ., தொழிலநுட்பத்தை எவ்வாறு பயன்படுத்தப்படலாம் என்பதும் குறித்தும் ஆசிரியர்களுக்கு விளக்கப்படும்.
- மேலும், 'டீப் பேக்' குறித்தும் அவர்களுக்கு புரிதல் ஏற்படுத்தப்படும்.
- இந்த ஏ.ஐ., தொழில்நுட்பப் பயிற்சி ஆசிரியர்களுக்கு உதவுவது மட்டுமல்லாமல், மாணவர்களுக்கு கற்றல் திறனை அதிகரிக்கவும் உதவும்.

## கேண்டிடேட்ஸ் தொடரில் பட்டம் வென்று சாதனை படைத்தார் இந்தியாவின் டி.குகேஷ்

- உலக சாம்பியனுடன் விளையாட வீரரை தேர்வு செய்யும் கேண்டிடேட் செஸ் தொடர் கனடாவின் டொராண்டா நகரில் நடைபெற்றது.
- 14 சுற்றுகளை கொண்ட இந்த தொடரில் இந்திய கிராண்ட் மாஸ்டரான டி.குகேஷ் தனது கடைசி சுற்றில் அமெரிக்காவின் ஹிகாரு நகமுராவுடன் மோதினார்.
- இதில் கருப்பு நிற காய்களுடன் விளையாடிய குகேஷ் 71-வது காய் நகர்த்தலின் போது ஆட்டத்தை டிராவில் முடித்தார்.

## வைஷாலிக்கு 2-வது இடம்

- மகளிருக்கான கேண்டிடேட்ஸ் தொடரில் சீனாவின் ஸோங்யி டான் 9 புள்ளிகளை குவித்து சாம்பியன் பட்டம் வென்றார்.
- இந்திய கிராண்ட் மாஸ்டர்களான கொனேரு ஹம்பி, ஆர். வைஷாலி, சீனாவின் டிங்ஜேய் லெய் ஆகியோர் தலா 7.5 புள்ளிகளுடன் 2-வது இடத்தை பகிர்ந்து கொண்டனர்.

## அமெரிக்க குடியுரிமை பெறுவதில் இந்தியர்களுக்கு 2-வது இடம்

- அமெரிக்க மக்கள் தொகை கணக்கெடுப்பு அறிக்கையின்படி 65,960 இந்தியர்கள் முறையான அனுமதி பெற்று அமெரிக்க குடிமக்களாக மாறியுள்ளனர்.
- அதன்படி மெக்சிகோவுக்கு அடுத்தபடியாக இந்தியர்கள் 2-வது இடத்தில் உள்ளனர்.
- 2022-ம் ஆண்டு நிலவரப்படி வெளிநாடுகளைச் சேர்ந்த 4.6 கோடி பேர் அமெரிக்காவில் வசித்து வருகின்றனர்.
- இது, அமெரிக்காவின் மொத்த மக்கள் தொகையான 33.33 கோடியில் 14 சதவீதம் ஆகும்.
- மொத்த வெளிநாட்டவர்களில் 53 சதவீதம் அதாவது 2.45 கோடி பேருக்கு அமெரிக்காவில் குடியுரிமை கிடைத்துள்ளது.
- அமெரிக்க குடியுரிமை பெற்றதில் மெக்சிகோ நாட்டவர் (1,28,878 பேர்) முதலிடத்தில் உள்ளனர்.
- அடுத்தபடியாக இந்தியர்கள் (65,960 பேர்) உள்ளனர்.